**ஜூலை – 16**

# TNPSC துளிகள்

- சென்னையின் ஆ ரா ஹரிகிருஷ்ணன் சமீபத்தில் பிரான்சின் லா பிளேன் என்ற ஒரு இடத்தில் நடைபெற்ற சர்வதேச செஸ் திருவிழாவில் இந்தியாவின் 87வது கிராண்ட் மாஸ்டராக ஆனார்.
- கலாச்சாரத் துறை அமைச்சகமானது, 'Reclaiming India's Knowledge Legacy Through Manuscript Heritage' என்ற தலைப்பில் இந்தியாவின் முதல் உலகளாவிய கையெழுத்துப் பிரதி பாரம்பரிய மாநாட்டை நடத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்திய விமானப்படை ஆகியவை Su-30 Mk-I போர் விமானத்திலிருந்து காட்சிப்புல வரம்பிற்கு அப்பாற்பட்ட வானிலிருந்த படியே வானில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கக் கூடிய அஸ்த்ரா (BVRAAM) ஏறிகணையின் வெற்றிகரமான ஏவுதல் சோதனையை நடத்தியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வள்ளுவர் மறை வைரமுத்து உரை – வைரமுத்து





- பாடலாசிரியர் வைரமுத்து எழுதிய வள்ளுவர் மறை வைரமுத்து உரை எனும் திருக்குறள் விளக்கவுரையை தமிழக முதல்வர் வெளியிட்டார்.
- பிளேட்டோ மற்றும் அரிஸ்டாட்டில் மதச்சார்பற்றப் படைப்புகளை எழுதியிருந்தாலும், திருவள்ளுவர் இந்தக் கிரேக்க தத்துவஞானிகளை விட மிகவும் முந்தைய காலத்தில் வாழ்ந்து இந்தப் படைப்பினை உருவாக்கினார்.
- திருவள்ளுவர் பகுத்தறிவு, சமூக நீதி மற்றும் சுயமரியாதையின் கவிஞர் என்று பல செய்யுள் வரிகள் வாதிடுகின்றன.
- தமிழ் மொழியானது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மிக கணிசமாக வளர்ச்சியடைந்து வருவதால் திருக்குறளுக்கான ஒரு புதிய விளக்கம் அவசியமாகும்.
- 'காமம்' ஒரு காலத்தில் ஆழ்ந்த அர்த்தத்தைக் கொண்டிருந்தது, ஆனால் அதன் பொருள் தற்போது மாறிவிட்டது.

## தமிழ்நாட்டின் TN-KET திட்டம்

- TN-KET (காசநோய் இறப்பில்லா திட்டம்) ஆனது 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது கடுமையான காசநோய் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் மிகப் பொருத்தமான சிகிச்சையை வழங்குவதன் மூலம் காசநோய் (TB) உயிரிழப்பைக்

குறைப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்ட தமிழ்நாட்டின் மாநில அளவிலான முன்னெடுப்பாகும்.

- இது BMI, ஆக்ஸிஜன் அளவு, சுவாச வீதம், கால் வீக்கம் மற்றும் நிலையாக நிற்பதற்கான திறன் ஆகிய ஐந்து அளவுருக்களை மதிப்பிடும் ஒரு எளிய அறிக்கைப் பதிவு அடிப்படையிலான சோதனைக் கருவியைப் பயன்படுத்துகிறது.
- இந்தத் திட்டமானது, 98% கடுமையான காசநோய் நோயாளிகளை ஏழு நாட்களுக்குள் மருத்துவமனையில் அனுமதிக்க விரைவாகக் கண்காணிக்கிறது.
- TN-KET ஆனது ஆறு மாதங்களுக்குள் ஆரம்பகாலக் காசநோய் உயிரிழப்புகளில் 20% குறைப்பை அடைந்தது.
- இது இந்தியாவின் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்துடன் (NTEP) இணைக்கப்பட்ட அளவிடக் கூடிய மாதிரியையும் வழங்குகிறது.
- இலக்கு சார்ந்த திட்டங்களை நன்கு செயல்படுத்துவதற்காக என நிகழ்நேரத் தரவைப் பயன்படுத்துகின்ற இந்தத் திட்டமானது, தரவு சார்ந்த நிர்வாகத்தை ஊக்குவிக்கிறது.




# தேசியச் செய்திகள்

## குவாண்டம் வழியான கணினி அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்கும் ஒரு நடவடிக்கையுடன் கூடிய இணையவெளிப் பாதுகாப்பு


- MeitY (மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்) ஆனது, "Transitioning to Quantum Cyber Readiness" என்ற தலைப்பிலான ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- CERT-In ஆனது (இந்தியக் கணினி அவசரநிலை பதிலெதிர்ப்புக் குழு) மற்றும் SISA ஆகியவை இந்த முயற்சியில் கூட்டு சேர்ந்துள்ளன.
- இது இந்தியாவின் குவாண்டம் வழி கணினி அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்கும் நடவடிக்கையுடன் கூடிய மிகப் பாதுகாப்பான எண்ணிம உள்கட்டமைப்பிற்கு மாறும் நடவடிக்கைகளை வழி நடத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெள்ளை அறிக்கையானது, BFSI (வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீடு), சுகாதாரம்

மற்றும் அரசு போன்ற துறைகளுக்கு தெளிவான வழிகாட்டுதலை வழங்குகிறது.

❖ 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் இந்தியாவின் இணையவெளி எதிர் நடவடிக்கை முன்னெடுப்புகளை CERT-In தொடர்ந்து வழிநடத்துகிறது.




## தீவுகள் பாதுகாப்பு மண்டல விதிகள் 2025




❖ அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகளுக்கான தீவுகள் பாதுகாப்பு மண்டல (IPZ) விதிகளை மத்திய அரசு திருத்தியமைத்துள்ளது.

❖ IPZ அறிவிப்பின் (2011) கீழான அனுமதியின் செல்லுபடியாகும் காலம் 10 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

❖ இது 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிவிப்பு உடன் ஒத்துப் போகிறது.

❖ இந்தப் புதிய விதிகளானது, புதிய ஒப்புதல்களின் தேவையில்லாமல் இதர பல சட்ட நிறுவனங்களுக்கிடையில் அனுமதிகளை மாற்றவும் அவற்றைப் பிரித்து அளிக்கவும் அனுமதிக்கின்றன.

- தீவுகள் பாதுகாப்பு மண்டலம் ஆனது கடலோரப் பகுதிகளை சுற்றுச்சூழல் உணர் திறன் அடிப்படையில், தொழில்துறை உருவாக்கத்திற்கான மிகவும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் நான்கு தீவு கடலோரப் பிராந்திய மண்டலங்களாக (ICRZ-I முதல் ICRZ-III மற்றும் நீர்நிலைப் பகுதிகள்) வகைப்படுத்துகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## பாரம்பரிய மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவு - WHO




- பாரம்பரிய மருத்துவத்துடன், குறிப்பாக ஆயுஷ் மருத்துவ முறைகளுடன் செயற்கை நுண்ணறிவினை ஒருங்கிணைப்பதில் இந்தியாவின் முன்னோடியான முயற்சிகளை உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்து வருகிறது.
- செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் நோயறிதல் கருவிகள் இதயத் துடிப்பு ஆய்வு, பிராகிருதிப் பகுப்பாய்வு மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தடுப்புப் பராமரிப்பு சேவை ஆகியவற்றை மேம்படுத்துகின்றன.
- ஆயுர்வேதத்தை மரபணுவியலுடன் ஒருங்கிணைக்கும் ஆயுர்வேத மரபணுவியல் முன்னெடுப்பானது, நோய்க் குறிப்பான்களை அடையாளம் காணவும், சுகாதார பரிந்துரைகளைத் தனிப் பயனாக்கவும் வேண்டி இந்தச் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துகிறது.
- மூலிகை சூத்திரங்களின் மரபணு மற்றும் மூலக்கூறு அடிப்படையை இந்த செயற்கை நுண்ணறிவு வெளிக்கொணர்ந்து, பாரம்பரிய மருத்துவ அறிவை நவீன அறிவியலுடன் இணைக்கிறது.
- பாரம்பரிய அறிவு சார் எண்ணிம நூலகம் (TKDL) ஆனது உள்நாட்டு அறிவைப் பாதுகாப்பதற்கான உலகளாவிய மாதிரியாக சிறப்பிக்கப் படுகிறது.
- செயற்கை இரசாயன உணரிகள் ரசா, குணா மற்றும் வீர்யா போன்ற பாரம்பரிய

அளவுருக்களை மதிப்பிடுகின்றன.

- ஆயுஷ் துறையானது, இந்தியப் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்குகின்ற 43.4 பில்லியன் டாலர் மதிப்பிலான சந்தை அளவைக் கொண்டுள்ளது.

## 17வது பிரிக்ஸ் உச்சி மாநாடு 2025

- 17வது வருடாந்திர பிரிக்ஸ் உச்சி மாநாடு (2025) ஆனது பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடைபெற்றது.
- 2012 ஆம் ஆண்டு ஹு ஜின்டாவோவுக்குப் பிறகு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்ற பிறகு, சீன அதிபர் முதல் முறையாக இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.
- இந்த நிகழ்வின் கருத்துரு, "Strengthening Global South Cooperation for More Inclusive and Sustainable Governance" என்பதாகும்.
- அவை ரியோ டி ஜெனிரோ பிரகடனத்தில் கையெழுத்திட்டன.
- இந்தோனேசியாவானது 2025 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வமாக பிரிக்ஸ் அமைப்பில் இணைந்தது.
- 2024 ஆம் ஆண்டில், ஈரான், ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து மற்றும் எத்தியோப்பியா ஆகியவை இந்தக் குழுவில் இணைந்தன.
- இந்த உச்சி மாநாடு ஆனது பெலாரஸ், பொலிவியா, கியூபா, கஜகஸ்தான், மலேசியா, தாய்லாந்து, உகாண்டா மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுக்கு இணை பங்குதார அந்தஸ்தை விரிவுபடுத்தி, ஒரு புதிய "பங்குதார நாடுகள்" என்ற வகையை அறிமுகப் படுத்தியது.
- சவுதி அரேபியாவானது இன்னும் அதன் பிரிக்ஸ் உறுப்பினர் அந்தஸ்தை அதிகாரப் பூர்வமாக்கவில்லை, அதே நேரத்தில் 2024 ஆம் ஆண்டில் அமைப்பில் சேரும் என்று எதிர்பார்க்கப் பட்ட அர்ஜென்டினா பின்னர் விலகியது.
- இந்தியா பிரிக்ஸ் அமைப்பின் தலைமைத்துவத்தினை ஏற்றுக் கொண்டு 2026 ஆம் ஆண்டில் 18வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டை நடத்தும்.
- இந்த நிகழ்வின் கருத்துரு, 'Building Resilience and Innovation for Cooperation and Sustainability' என்பதாகும்.
- பிரிக்ஸ் அமைப்பானது உலக மக்கள்தொகையில் 45% மற்றும் உலக மொத்த உள் நாட்டு உற்பத்தியில் 37.3% பங்கினை கொண்டுள்ளது என்பதோடு இது ஐரோப்பிய ஒன்றியத்தின் 14.5% மற்றும் G7 நாடுகளின் 29.3% பங்கினை விட அதிகமாகும்.
- பிரிக்ஸ் அமைப்பிற்கென நிரந்தர இருக்கை அல்லது பிரத்தியேக செயலகம் இல்லை.
- உலகளாவிய வர்த்தகத்தில் 18 சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களித்தாலும், பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான வர்த்தகம் 2.2% என்ற அளவில் மிக குறைவாகவே உள்ளது (2022).

### *17வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் முடிவுகள்*

- உலகளாவிய நிர்வாகச் சீர்திருத்தம்: ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலிருந்து அதிக நிரந்தர உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் விரிவாக்க நடவடிக்கையினை பிரிக்ஸ் ஆதரித்தது.
- நிலையான மேம்பாடு: வளர்ந்து வரும் நாடுகளுக்கான வளங்களைத் திரட்டுவதற்காக பருவநிலை நிதி குறித்தத் தலைவர்களின் கட்டமைப்பு பிரகடனத்தை பிரிக்ஸ் ஏற்றுக் கொண்டது.

- அமைதி மற்றும் பாதுகாப்பு: பிரிக்ஸ் "ஆப்பிரிக்கப் பிரச்சனைகளுக்கான ஆப்பிரிக்க தீர்வுகளை" மீண்டும் உறுதிப்படுத்தியது, காசா போர் நிறுத்தம் மற்றும் இரு நாடுகளின் தீர்வுக்கு அழைப்பு விடுத்தது என்பதோடு பஹல்காம் தாக்குதலையும் கண்டித்தது.
- நிதி ஒத்துழைப்பு: அமெரிக்க டாலரைச் சார்ந்திருக்கும் நிலையை குறைப்பதற்காக பன்னாட்டுப் பண வழங்கீட்டு முன்னெடுப்பு குறித்தப் பேச்சுவார்த்தைகளை பிரிக்ஸ் அமைப்பு முன்னெடுத்தது.
- உலகளாவிய செயற்கை நுண்ணறிவு ஆளுகை குறித்த தலைவர்களின் அறிக்கையை பிரிக்ஸ் ஏற்றுக் கொண்டு, தரவுப் பொருளாதார ஆளுகை புரிதலை நிறைவு செய்தது, மேலும் கூட்டு விண்வெளி ஆய்வுக்காக பிரிக்ஸ் நாடுகளின் விண்வெளி சபையினை உருவாக்க ஒப்புக் கொண்டது.
- சுகாதார ஏற்றத்தாழ்வுகளைச் சமாளிப்பதற்காக பிரிக்ஸ் நாடுகள் சமூக ரீதியாக தீர்மானிக்கப்பட்ட நோய்களை (காசநோய்) நீக்குவதற்கான ஒரு கூட்டாண்மையைத் தொடங்கியது.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## SRP திட்டத்தில் கங்கை நீர் முதலை மற்றும் தேன் உண்ணும் கரடி

- தேசிய வனவிலங்கு வாரியத்தின் (SC-NBWL) நிலைக் குழுவானது, உயிரின மீட்புத் திட்டத்தில் கங்கை நீர் முதலை (சொம்பு மூக்கு முதலை) மற்றும் தேன் உண்ணும் கரடியைச் சேர்ப்பதற்குப் பரிந்துரைத்தது.
- இது வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டுக்கான மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டத்தின் (CSS-IDWH) கீழ் செயல்படுத்தப்படுகிறது.
- SC-NBWL ஆனது 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டது.
- கங்கை நீர் முதலை / கரியல் நன்னீர் நதிகளில் முக்கியமாக இந்தியாவில் கங்கை நதி மற்றும் நேபாளத்தில் உள்ள ரப்தி-நர்யானி நதியின் துணை நதிகளில் வாழ்கிறது.
- இது IUCN அமைப்பினால் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள ஒரு இனமாக வகைப் படுத்தப் பட்டுள்ளது.
- இது அருகி வரும் வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் (CITES) சர்வதேச வர்த்தகம் குறித்த உடன்படிக்கையின் இணைப்பு I பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.
- அனைத்து முதலை இனங்களிலும் கங்கை நீர் முதலையானது மிக மெல்லிய மற்றும் நீளமான மூக்கைக் கொண்டுள்ளது.


- தேன் உண்ணும் கரடியானது ஒரு சிறிய விலங்கு, தனித்து வாழும், பொதுவாக இரவு நேரங்களில் வாழும் விலங்கு ஆகும்.
- இது இந்தியா, இலங்கை மற்றும் நேபாளத்தை பூர்வீகமாகக் கொண்டது.
- இது தீபகற்ப இந்தியா, மேற்குத் தொடர்ச்சி மலைகள், தக்காணப் பீடபூமி, கங்கைச் சமவெளி மற்றும் வடகிழக்கு போன்ற இந்தியாவில் உள்ள ஐந்து உயிர் புவியியல் மண்டலங்களில் வாழ்கிறது.
- தேன் உண்ணும் கரடியானது IUCN அமைப்பினால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய ஒரு இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இது 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் அட்டவணை I மற்றும் CITES உடன்படிக்கையின் இணைப்பு I பகுதியின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.
- CSS-IDWH அந்து வனவிலங்கு வளங்காப்பிற்காக மாநில மற்றும் ஒன்றியப் பிரதேச (UT) அரசாங்கங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது.
- இது வரை, பனிச் சிறுத்தை, ஆசிய சிங்கம் மற்றும் கான மயில் உட்பட 22 இனங்கள் ஆனது இனங்கள் மீட்பு திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன.




## RhoDIS இந்தியா திட்டம்

- காண்டாமிருக டிஎன்ஏ குறியீட்டு அமைப்பு (RhoDIS)- இந்தியத் திட்டத்தின் கீழ், ஒரு சிறப்புக் குழு 2,573 காண்டாமிருக கொம்புகளிலிருந்துப் பெறப்பட்ட மாதிரிகளின் மரபணுப் பகுப்பாய்வைத் தொடங்கியுள்ளது.
- இந்தக் கொம்புகளில் பெரும்பாலானவை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அசாம் வனப் பிரிவால் அழிக்கப்பட்டன.
- இந்திய வனவிலங்கு நிறுவனத்தின் (WII) மரபியல் ஆய்வகம், RhoDIS இந்தியாவிற்கான தரவுத் தளத்தை உருவாக்குவதற்காக வேண்டி டிஎன்ஏ விவரக் குறிப்புகள் உருவாக்க நடவடிக்கையினை மேற்கொள்கிறது.

- இந்தப் பகுப்பாய்வானது, அசாமின் காண்டாமிருக எண்ணிக்கையில் காலப்போக்கில் ஒரு குறிப்பிட்ட DNA வரிசையான குறுகிய டிஎன்ஏ வரிசை மீண்டும் வருதல் (STR) அல்லீல் எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றங்களை அடையாளம் காண உதவுகிறது.
- RhoDIS இந்தியா திட்டம் ஆனது 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது MoEFCC, காண்டாமிருகம் வாழும் மாநிலங்கள், இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) மற்றும் இயற்கை இந்தியாவிற்கான உலகளாவிய நிதி (WWF-India) ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பாகும்.
- இந்தத் திட்டமானது காண்டாமிருகம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் குறித்த ஒரு அறிவியல் விசாரணையை மேம்படுத்துவதையும், இந்தியாவின் காண்டா மிருக எண்ணிக்கையைத் திறம்பட நிர்வகிப்பதை ஆதரிப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.




# இதரச் செய்திகள்

## கம்போடியாவில் உள்ள இனப்படுகொலை தளங்கள் - யுனெஸ்கோ பாரம்பரிய தளம்

- கம்போடியாவில் உள்ள மூன்று இனப் படுகொலை காலச் சித்திரவதை மற்றும் மரண தண்டனை தளங்களை யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய பட்டியலில் சேர்த்துள்ளது.
- பாரிஸில் நடைபெற்ற யுனெஸ்கோ உலகப் பாரம்பரியக் குழுவின் 47வது அமர்வின் போது இந்தச் சேர்ப்பு அறிவிக்கப்பட்டது.
- 1975 ஆம் ஆண்டில் கெமர் ரூஜ் கட்சி ஆட்சிக்கு வந்ததன் 50வது ஆண்டு நிறைவை ஒட்டி இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- மூன்று தளங்களில் டுவோல் ஸ்லெங் இனப்படுகொலை அருங்காட்சியகம், கம்போங் ச்னாங் மாகாணத்தில் உள்ள M-13 சிறைச்சாலை மற்றும் புனோம் பென்னுக்கு அருகில் உள்ள சோயுங் எக் கொலைக் களம் ஆகியவை அடங்கும்.
- முன்னர் உயர்நிலைப் பள்ளியாக இருந்த துவோல் ஸ்லெங், 15,000 க்கும் மேற்பட்டோர் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட S-21 சிறைச் சாலையாகப் பயன்படுத்தப் பட்டது.
- இதில் M-13 சிறைச்சாலை மத்திய கம்போடியாவில் உள்ள ஆரம்பகால கெமர் ரூஜ்

சித்திரவதை மையங்களில் ஒன்றாக செயல்பட்டது.

- சோயுங் எக் ஒரு மாபெரும் மரண தண்டனை தளமாக இருந்தது.
- கெமர் ரூஜ் இனப் படுகொலையானது 1975 மற்றும் 1979 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பட்டினி, சித்திரவதை மற்றும் மரண தண்டனை மூலம் சுமார் 1.7 மில்லியன் மக்களின் மரணத்திற்கு வழிவகுத்தது.
- யுனெஸ்கோ பட்டியலில் முன்னதாக அங்கோர், பிரியா விஹியர், சம்போ பிரியா குக் மற்றும் கோ கெர் ஆகிய நான்கு கம்போடிய தொல்பொருள் தளங்கள் இடம் பெற்று உள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★